7500 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் அந்தப் பகுதியில் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை குறித்து, கணக்கெடுப்பு செய்யப்பட்டு, தேவை ஏற்படின், அந்த அலுவலகம் அமைத்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

பால் பதப்படுத்தும் நிலையம்

***9759—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது அரசு அமைந்த நாள் முதல், ஆவின் பொருட்கள் விற்பனையில் பல வரலாற்று சாதனைகளைப் புரிந்துகொண்டிருக்கிறார். அந்தவகையில் விருகம்பாக்கம் தொகுதியைப் பொறுத்தவரையில், கோயம்பேடு ஒரு மையப் பகுதியாக உள்ளது. சென்னையில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளான அம்பத்தூர்,*

2022 ஏப்ரல் 21]

சோழிங்கநல்லூர், மாதவரம் பகுதிகளில் மட்டும்தான் ஆவின் பொருட்கள் தயாரிக்கப்படும் நிலையங்கள் இருக்கின்றன. கோயம்பேடு பகுதியைப் பொறுத்தவரையில், காய், கனி, பூ ஆகிய அங்காடிகள் அமைந்திருக்கின்றன. அந்தப் பகுதியில் சில்லறை வியாபாரிகள் பயனடைந்து வருகிறார்கள். அங்கு அடிப்படை வசதிகளும் அதிக அளவில் இருக்கின்றன. ஆகவே, அரசு இதனை மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விருகம்பாக்கம் தொகுதியிலுள்ள OSR இடங்களில் ஆவின் நிறுவனம் தயாரிக்கின்ற அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்யக்கூடிய ஆவின் பூங்கா ஒன்றும் அமைத்துத் தருவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் விற்பனை எல்லைக்குட்பட்ட பகுதியாகும். மேலும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் கட்டுப்பாட்டில் அம்பத்தூர் பால் பண்ணை செயல்பட்டு வருகிறது. அம்பத்தூரிலிருந்து விருகம்பாக்கம் சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவில் மட்டுமே இருக்கிறது. மேலும், பெருநகரப் பகுதியில் கறவை மாடுகள் பராமரிக்க இயலாத காரணத்தாலும், தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது ஏதும் இல்லாததாலும், இணையத்தின்மூலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து பால் பெறப்பட்டு, மாதவரம் பால் பண்ணை, அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பெருநகர பால் பண்ணைகள்மூலம் பால் பதப்படுத்தப்பட்டு, நுகர்வோருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஏற்கெனவே இணையத்தில் 3 பால் பதப்படுத்தும் நிலையங்கள் இருப்பதால், புதியதாக விருகம்பாக்கம் தொகுதியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை

என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அடிப்படை வசதிகளும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் நேரில் ஆய்வு செய்து, பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இது கோடைக்காலம் என்பதால், பொது மக்கள் ஐஸ்கிரீம், லஸ்ஸி, மோர் ஆகிய குளிர்பானங்களை வாங்கி பருகக்கூடிய நேரம் இது. ஆகவே, மேலைநாடுகளில் உள்ளதுபோல,* Malls, *மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடற்கரையில் அரசு* street vending machine *மூலம் விற்பனை செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சிறியவர்களும், என்னைப் போன்ற இளைஞர்களும் ஆவின் நூடுல்ஸை அதிக அளவில் பகிர்ந்துகொண்டிருக்கிறோம். ஆவின் நூடுல்ஸ் பல இடங்களில் கிடைப்பதில்லை. அதிக அளவில் கிடைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் வியாபாரிகள் சங்கத்தினுடைய தலைவரின் மகன். அதனால் வியாபாரத்தையே கேட்கிறார்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *நூடுல்ஸ் அண்மையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. இருந்தாலும் தேவைக்கேற்ப நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாங்கள் அதைத் தயார் செய்துகொண்டிருக்கிறோம். அருமை நண்பர்* super market *நடத்தி வருகிறார். அந்தக் குழுமத்தின் சார்பாக ஒட்டுமொத்தமாக தேவைக்கான உத்தரவு*

2022 ஏப்ரல் 21]

போடுவாரேயானால், அவருக்கு ஒட்டுமொத்தமாகத் தயாரித்து வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவரவர் தேவைக்கேற்ப தினம் தினம் என்ன தேவையோ அதற்கேற்றாற்போல அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

உள் விளையாட்டு அரங்கம்

***17870—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, ஏரல், ஸ்ரீவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய வட்டங்களில் உள் விளையாட்டு அரங்கங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீவைகுண்டம், ஏரல், சாத்தான்குளம் வட்டங்களில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*